# பத்திரிக்கைச் செய்தி

## இருப்பிட சான்றிதழ், வருவாய் சான்றிதழ், சாதி சான்றிதழ் வழங்க லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக கிராம நிர்வாக அதிகாரி, அவர்களுக்கு 4 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

2008ம் வருடம் கடலூர் மாவட்டத்தில் வசித்து வந்த புகார்தாரர் இருப்பிட சான்றிதழ், வருவாய் சான்றிதழ், சாதி சான்றிதழ் வேண்டி விருதாச்சலம் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேலனுப்ப திரு.சீனிவாசன், கிராம நிர்வாக அதிகாரி, இருப்பு கிராமம், விருதாச்சலம் தாலுகா, கடலூர் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.1,500/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் கடலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.சீனிவாசன் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் கடலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.சீனிவாசன், கிராம நிர்வாக அதிகாரி, அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.1,500/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது கடலூர் மாவட்டம் முதன்மை குற்றவியல் நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 25.01.2023 இவ்வழக்கில் குற்றவாளி திரு.சீனிவாசன், கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.1,500/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 2 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 2 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1,000/- அபராதமும் விதித்து, இத்தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. திரு.சீனிவாசன், கிராம நிர்வாக அதிகாரி பணி ஓய்வு செல்ல அனுமதிப்பக்கப்படவில்லை.